[1991 அக்டோபர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 122. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

122—

தஞ்சை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி.

*649 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அல்லது மற்றொரு நகரத்தில் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமைகளையும், கொடியவர்களையும் ஒழித்து வெற்றிநடை போடும் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்று 100 வது நாள் காணும் புரட்சித் தலைவி அவர்களை நான் மனமார, இதயமார பாராட்டுகிறேன். அதே நேரத்தில் (குறுக்கீடு) இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். தனி நபர் கல்லூரிகளில் மேனேஜ்மெண்ட் கோட்டாவில் எல்லாம் இன்று ரேட் மிகவும் அதிகரித்து விட்டது. ஆகவே தான் அரசு சார்பான இந்த என்ஜினியரிங் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று நாம் நிறைய கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து கும்பகோணம் நகரத்தில் ஒரு நல்ல என்ஜினியரிங் கல்லூரியைத் துவங்குவதற்கு அல்லது மற்ற எனைய இதுபோன்ற பெரிய நகரங்களிலாவது துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வியைப் பொறுத்தவரை அல்லது மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை நீண்டகாலமாக அரசாங்கத்தின் பொறுப்பிலே மிகக் குறைந்த கல்லூரிகளே நடைபெற்ற

1991 அக்டோபர் 1]

வந்தன. சுமார் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம் உதவி செய்கிற தனியார் பொறுப்பிலே கல்லூரிகளைத் தொடங்க அனுமதித்தது. அவைகளும் ஒன்று, இரண்டு என்ற அளவிலேதான் நீண்ட காலமாக இருந்தது. நம்முடைய நாட்டில் இளைஞர்களுக்குத் தேவைக்கேற்ப பொறியியல் கல்லூரிகள் துவங்கவில்லை என்கிற குறை நீண்ட காலமாக இருந்து வந்த சூழ்நிலையில் நம்முடைய மாணவர்கள் மற்ற மாநிலங்களிலே போய் பணம் கொடுத்து, கேப்பிடேஷன் ஃபீஸ் கொடுத்து படிக்கின்ற சூழ்நிலை உருவானபோதும், இங்கே அந்த பற்றாக்குறை தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. அதனாலே தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு இந்த பொறியியல் கல்லூரிகளை மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று தமிழகத்திலேயும் மிகப் பெரிய அளவில் தனியாருக்கு அனுமதி வழங்கி தொடங்கலாம் என்று முடிவு எடுத்தார்கள். அதன் விளைவாக நீண்டகாலமாக அரசு பொறுப்பிலே 5 கல்லூரிகளும், அரசு நிதியுதவி பெறுபவை 3 கல்லூரிகளும் இருந்த சூழ்நிலையில், 30 தனியார் தங்களுடைய சொந்த பொறுப்பிலே நடத்துகிற கல்லூரிகள் தோன்றி இன்றைக்கு 8,000 மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு பயிற்சி பெற்று வெளியேறுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கவேண்டுமானால் இன்றைக்குள்ள சூழ்நிலையில் அரசாங்கம் அவ்வளவு நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இருக்கின்றபோது, அரசு பொறுப்பிலே பொறியியல் கல்லூரிகள் தொடங்குவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தனியார் பொறுப்பிலே கல்லூரிகள் தொடங்குவதை அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கலாம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123. டாக்டர் ச. சுந்தரராஜ். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் அவர்கள்.